**வருகின்ற 2020-ம் ஆண்டு ஜீலை மாதம் 6-ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**முன்னிலை: திருமதி.S.M.பாரிஜான் பி.ஏ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**

பவானி நகராட்சியில் பழுதான தார்சாலைகளை சீரமைக்க கீழ்கண்ட இடங்களை தேர்வு செய்து ரூ.100.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2020-21 -ன் கீழ் திட்டநிதி 75 சதவீதம் மான்யமாகவும் மீதத் தொகை 25 சதவீதத்தை நகராட்சி பங்குத் தொகையாகவும் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெற வேண்டி விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Ward No | Name of the work | Road Length in (M) | Road Width in (M) | Estimate amount Rs. in Lakhs |
|---|---|---|---|---|---|
| 1 | 1,3,5,6,7,8,11 &19 | Restoration of BT road at Chokkarayan Kadu, Anna Nagar, Gurunathan street,Meenatchi kalyana mandapam road,Thiruvalluvar Nagar, Somasundrapuram, Devapuram and Kalthozhilalar 3rd street in ward No. 1,3,5,6,7,8, 11 &19 | 2562.00 | 4.70,4.00, 6.00,4.50, 3.00,4.80,3.50,6.60& 6.30 | 100.00 |

**அலுவலககுறிப்பு:**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.608/2020/இ1)

**இடம்: பவானி**

**நாள்: 06.07.2020**

**(ஒம்)திருமதி.S.M.பாரிஜான்**
**ஆணையாளர்/தனி அலுவலர்**
**பவானி நகராட்சி**

**வருகின்ற 2020-ம் ஆண்டு ஜீலை மாதம் 15-ம் தேதி புதன் கிழமை பிற்பகல் 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**முன்னிலை: திருமதி.S.M.பாரிஜான் பி.ஏ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**

1. பவானி நகராட்சியில் பழுதான தார்சாலைகளை சீரமைக்க கீழ்கண்ட இடங்களை தேர்வு செய்து ரூ.100.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணியினை தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2020-21-ல் கீழ் மான்யமாக நிதி பெற்று பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.142 நாள்: 06.07.2020 அனுமதி பெறப்பட்டு நிர்வாக அனுமதி பெற வேண்டி விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. தற்போது நகராட்சி ஆணையர்,சென்னை அவர்களின் கடித ந.க.எண். 17349/2019/இ3 நாள்:14.07.2020-ல் பவானி நகராட்சிக்கு ரூ.75.00 இலட்சம் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2020-21-ன் கீழ் மான்யமாகவும் ரூ.25.00 இலட்சம் நகராட்சி பங்குத் தொகையில் பணியினை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டின்படி நிர்வாக அனுமதி பெற்று சாலைப்பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Ward No | Name of the work | Road Length in (M) | Road Width in (M) | Estimate amount Rs. in Lakhs |
|---|---|---|---|---|---|
| 1 | 1,3,5,6, 7,8,11 &19 | Restoration of BT road at Chokkarayan Kadu, Anna Nagar, Gurunathan street,Meenatchi kalyana mandapam road,Thiruvalluvar Nagar, Somasundrapuram, Devapuram and Kalthozhilalar 3rd street in ward No. 1,3,5,6,7,8, 11 &19 | 2562.00 | 4.70,4.00, 6.00,4.50, 3.00,4.80,3. 50,6.60& 6.30 | 100.00 |

அலுவலககுறிப்பு:
மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.608/2020/இ1)

2. பவானி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.24 மீன் மார்க்கெட்டில் புதியதாக மீன் தொட்டி கட்டப்பட்டுள்ளதற்கு மழை, வெய்யில் படாமல் இருக்க ரூப்செட் அமைத்தல் திறந்த வெளி கிணற்றிற்கு இரும்பு மூடி அமைத்தல் மற்றும் இதர கூடுதல் வேலைகள் செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.70000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதி 2020-21-ல் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.813/2020/இ1)

**இடம்: பவானி**

**நாள்: 15.07.2020**

**(ஒம்)திருமதி.S.M.பாரிஜான்**
**ஆணையாளர்/தனி அலுவலர்**
**பவானி நகராட்சி**

வருகின்ற 2020-ம் ஆண்டு ஜீலை மாதம் 31-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**முன்னிலை: திருமதி.S.M.பாரிஜான் பி.ஏ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**

1. ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீலை 2020-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

2. பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN36AR 3744 மற்றும் TN 36 AR 3430 ஆகிய வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு தகுதிசான்று புதுப்பிக்க ஆகும் செலவினத்திற்கு ஏற்கனவே நகர்மன்றம் தீர்மான எண்.61, நாள்: 31.03.2020 -ல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில் 03.07.2020 ஆம் தேதியன்று மேற்படி இரண்டு வாகனங்களுக்கு தனித்தனியே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. TN36 AR 3744 வாகனத்திற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விபரம் :

| வ. எண். | பொருள் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீபாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், 63, வைரபாளையம் நால்ரோடு,வாட்டர் ஆபிஸ் ரோடு, கருங்கல்பாளையம், ஈரோடு. | ரூ.34,450/- |
| 2. | ஸ்ரீ முருகன் ஆட்டோஸ், 26, செங்கோட்டையா நகர், வைரபாளையம், ஈரோடு. | ரூ.34,750/- |

2. TN36 AR 3430 வாகனத்திற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விபரம் :

| வ. எண். | பொருள் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ முருகன் ஆட்டோஸ், 26, செங்கோட்டையா நகர், வைரபாளையம், ஈரோடு. | ரூ.29,970/- |
| 2. | ஸ்ரீபாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், 63, வைரபாளையம் நால்ரோடு,வாட்டர் ஆபிஸ் ரோடு, கருங்கல்பாளையம், ஈரோடு. | ரூ.29,750/- |

இரண்டு வாகனங்களுக்கும் தனித்தனியே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் TN36 AR 3744 வாகனத்திற்கு வரிசை எண்.1லும், TN36 AR 3430 வாகனத்திற்கு வரிசை எண்.2-லும் குறிப்பிட்டுள்ள ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் பவானி நகராட்சி அவர்களிடம் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 274/2020/எச்1)

3. நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN36 AY 6793 -ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து சர்வீஸ் பணிகள் செய்ய மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட சர்வீஸ் சென்டர் ஆன CAI Industries Pvt. Ltd. Erode நிறுவனத்திடமிருந்து சுமார் ரூ50,000/- க்கு விலைப்புள்ளி பெறப்பட்டது. ஈப்பு வாகனத்தின் பயன்பாட்டின் அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று சர்வீஸ் பணி மேற்கொண்டமைக்கும், பணி முடிந்த பின் பட்டியல் வரப்பெற்று தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும், செலவு தொகை ரூ.44,542/-வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.822/2020/இ1)

4.அரசாணை (ப) எண்.72, சமூக நலம் சத்துணவுத் திட்டத்(சந4-1) நாள்:02.07.2020-ல் நகராட்சி பள்ளி சத்துணவு மையங்களில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவு திட்டத்தின் கீழ் உணவு உண்ணும் மாணவ மாணவியர்களுக்கு மே-2020-ம் மாதத்திற்கான கொரோனா வைரஸ் தொற்று காலத்தில் உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே-2020 -ம் மாதம் ஒரு குழந்தைக்கு வழங்க வேண்டிய உணவின்அளவு

| | | அரிசி | பருப்பு |
|---|---|---|---|
| 1. | துவக்கப்பள்ளி (1முதல் 5ம் வகுப்பு வரை) | 3100 கிராம் | 1200 கிராம் |
| 2. | உயர்நிலைப்பள்ளி ( 6 முதல் 10-ம் வகுப்பு வரை ) | 4650 கிராம் | 1250 கிராம் |

கொரோனா வைரஸ் தொற்று காலத்தில் பள்ளிகள் இயங்காமல் உள்ளதால் சத்துணவு உண்ணும் மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு உலர் உணவுப்பொருட்கள் அரிசி, பருப்பு மே-2020-ம் மாதத்திற்கு வழங்க பவானி நகராட்சி பள்ளிகளில் இயங்கும் 5 சத்துணவு மையங்களில் உணவு உண்ணும் 837 மாணவ மாணவியர்களுக்கு வழங்க வேண்டி உள்ளது.

ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.12520/2020/பஅ7, நாள்: 03.07.2020-ல் உலர் உணவுப் பொருட்கள் நகராட்சி பள்ளி சத்துணவு மையங்களில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்டத்தின் கீழ் உணவு உண்ணும் மாணவ மாணவியர்களுக்கு அரிசி மற்றும் பருப்பு பொட்டலங்களாக வழங்கிடவும் (கூட்டத்தை தவிர்க்கவும் ) அதற்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவு உண்ணும் மாணவ மாணவியர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | நகராட்சி நடுநிலைப்பள்ளி , வர்ணபுரம் | - | 290 |
| 2. | நகராட்சி நடுநிலைப்பள்ளி, காமராஜ் நகர் | - | 153 |
| 3. | நகராட்சி நடுநிலைப்பள்ளி, கிழக்கு | - | 170 |
| 4. | நகராட்சி துவக்கப்பள்ளி, பசுவேஸ்வரர் வீதி | - | 97 |
| 5. | நகராட்சி துவக்கப்பள்ளி, வடக்கு | - | 127 |
| | மொத்தம் | - | **837** |

1. அரிசி வழங்குதல் 5கிலோ பை 900 எண்ணிக்கையும்
2. பருப்பு வழங்குதல் 5கிலோ பை 900 எண்ணிக்கையும்

1800 எண்ணிக்கை துணிப்பைகள் உலர் உணவுப் பொருட்கள் வழங்குவதற்கு தேவைப்படுகிறது.

கொரோனா வைரஸ் தொற்று காலமாக உள்ளதால் கூட்டம் கூடுவதை தவிர்க்கவும் உலர் உணவுப்பொருட்களை பள்ளி மாணவ மாணவியர்கள் எளிதில் பெற்றுக் கொள்ளும் வகையில் துணிப்பைகளில் விநியோகம் செய்யவும், அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.20,000/- ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணியாக உள்ளதால் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிபெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

3. செலவு தொகையினை கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.783/2020/சி1)

5. பவானி நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணிணிகள் ஸ்கேனர், பிரிண்டர்கள் மற்றும் ஜெராக்ஸ் மெஷின், UPS ஆகியவற்றை ஆண்டு பராமரிப்பு செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 138, நாள்: 30.06.2020 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 21.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திருவாளர்.Spyder Technology Salem | 0.33% மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர். Digi Print Service Salem | 1.41% மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.33 சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் Spyder Technology, Salem அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.728/2020/இ1)

6. பவானி நகராட்சி வார்டு எண். 24, மீன் மார்க்கெட் மேம்பாடு செய்தல் பணிக்கு பணிக்கு மதிப்பீடு ரூ. 0.70 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 144 நாள்: 15.07.2020 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 31.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.பாலசுப்ரமணியன் | 0.43% மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு. P.A. செல்லப்பன் | 1.67% மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.43% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எஸ். பாலசுப்ரமணியன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.813/2020/இ1)

7. இந்நகராட்சியின் மூலம் செயல்பட்டு வருகின்ற அம்மா உணவகத்தில் பணிபுரியும் சூர்யா மகளிர் சுய உதவிக்குழு வார்டு எண். 20 ஜோதி விநாயகர் கோவில் தெரு, பவானி பணியாளர்கள் பன்னிரண்டு நபர்கள் தங்களது மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து நகராட்சி நிர்வாகத்திற்கு எதிராக வழக்கு தொடரமாட்டேன் என 21.07.2020-ம் தேதிய கடிதத்தில் சம்மதம் தெரிவித்து தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) தொகையினை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்கள்.

எனவே சூர்யா மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு 24.05.2015 ஆம் ஆண்டு முதல் 31.03.2020 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட மாதாந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி 12% தொகை ரூ.622995/- கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி சூர்ய மகளிர் சுய உதவிக்குழுவிற்கு EPF தொகை ரூ.622995/- ஐ திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. நகராட்சி எதிராக வழக்கு தொடரமாட்டேன் என்ற நிபந்தணைக்குட்பட்டு தொகையினை திரும்ப வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1134/2015/அ1)

8.பவானி நகராட்சி பகுதியில் உள்ள 27 வார்டுகளிலும் கொசுக்களால் பரவும் டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க நோய் தடுப்ப பணிகளை நல்ல முறையில் மேற்கொள்ள வீடுவீடாக சென்று கொசுப்புழு மருந்து தெளிப்பு பணி, கொசு உற்பத்தியாகும் இடங்களை அழித்தல் மற்றும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த புகை மருந்து தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே இந்நகராட்சிக்கென 35 Domestic Breeding Checker பணியாளர்களை அயற்பணி ஒப்படைப்பு ( Outsourcing Basis) முறையில் ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தி பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருவதன் ஒப்பந்தக்காலம் 31.07.2020 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இந்நிலையில் மேற்படி நோய்தடுப்பு பணிகளை இந்நகராட்சிப்பகுதியில் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டி உள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண்.12800/2019/G2, நாள்: 20.09.2019-ன்படி Unskilled Labour - Mazdoor Category -II -ன்படி நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு

| வ. எண் | விபரம் | தொகை(ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.440/- வீதம் வேலை நாட்களுக்கு<br>440 X 53 X 35 | 816200 |
| 2 | EPF **13 %** | 106106 |
| 3 | ESI **3.25 %** | 26527 |
| 4 | Administrative Expenses **5 %** | **40,810** |
| | | |
| | **TOTAL** | **989,643** |
| | **ROUNDED OFF** | **9,90,000** |

ரூ.440/- வீதம் தினக்கூலியாக வழங்கிட தெரிவித்துள்ளார்கள். மேற்படி ஊதிய விகிதத்தில் 35 பணியாளர்களை 53 வேலை நாட்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி அயற்பணி ஒப்படைப்பு ( Outsourcing Basis) முறையில் பணி மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. அதற்கான செலவினம் பின்வரும் விபரப்படி கணக்கிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணைகள் கடித ந.க.எண்: 1819/2016/எல்3, நாள்: 08.11.2016-ன் படி EPF and MP Act 1952-ற்கு இணங்கிட வேண்டும் என தெரிவித்துள்ளார்கள். எனவே, மேற்கண்டுள்ள விபரப்படி பணியாளர்களுக்கு EPF and MP Act 1952 ESI Act 1948- ன் படி மேற்கண்டவாறு செலவினம் கணக்கிடப்படுகிறது. எனவே, பணி வழங்கும் 53 வேலை நாட்களுக்கு மேற்காணும் செலவினத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி அயற்பணி ஒப்படைப்பு (Out sourcing Basis) முறையில் பணிமேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. நோய் தடுப்பு பணியின் அவசியம் கருதி நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 274/2020/எச்1)

9. பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளான வீடுவீடாக சென்று கொசுப்புழு மருந்து தெளிப்பு பணி, கொசு உற்பத்தியாகும் இடங்களை அழித்தல் மற்றும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த புகை மருந்து தெளிக்கும் பணிகள் போன்றவற்றை தினமும் 35 பணியாளர்களை கொண்டு 53 வேலை நாட்களுக்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கு ஏற்கனவே தனிஅலுவலர் அவர்கள் 10.07.2020 ஆம் தேதியன்று முன்அனுமதி வழங்கியுள்ளதால் 30.07.2020-ஆம் தேதியன்று இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் (நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான விலைவிகிதம்) |
|---|---|---|
| 1 | Trustus Outsourcing Solutions Pvt Ltd,<br>117, 28’th Street,<br>Balaji nagar, Chennai - 600 091. | ரூ. 533/– |
| 2 | Relyon Facility Services Pvt Ltd<br>Plot no.142, 5th cross street,<br>Sri sai nagar, Okkiam thoraipakkam,<br>Chennai-600 097 | ரூ. 536 /– |

<u>அலுவலக குறிப்பு</u>:–

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் குறிப்பிடப்பட்டுள்ள Trustus Outsourcing Solutions Pvt Ltd, No: 117, 28’th Street, Balaji nagar, Chennai - 600 091 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.

2. நோய்தடுப்புப் பணியின் அவசர அவசியம் கருதி குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய Trustus Outsourcing Solutions Pvt Ltd, Chennai அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 274/2020/எச்1)

10. பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்பொழுது கொரோனா தொற்று அதிகரித்து வருகின்றது. ஆணையாளர் மற்றும் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஆகியோர்கள் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள நபர்கள் வசிக்கும் இல்லம் மற்றும் தெருக்களை தனிமைப்படுத்தி மற்ற பகுதிகளுக்கு பரவாமல் தடுக்க சாலையின் குறுக்கே தடுப்பு அமைத்தும், Flex Banner வைத்தும் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே இப்பணியை இரண்டாம் கட்டமாக மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு அனுமதிக்கும்,நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.3336/ஜே2/ 2020.9 நாள்: 02.04.2020-ன் கடித்தில் "கோவிட் -19" அவசர பணிகளுக்கு Tamil nadu Transparency in tender Act 1998 in Tender Act, 1998 Under Section - 16(a) - ல் இருந்து விலக்களித்து விரைவாக பணிகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். விலைப்புள்ளி கோரி பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதி 2020-21-ல் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 885/2020/இ1)

11) பவானி நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் விநியோக பணியில் பம்ப்ஹவுஸ் கிளீனர், ரிசர்வாயர், கிளினர், மேல்நிலைத் தொட்டி இரவுகாவலர் மற்றும் பில்டர் பெட் கிளீனர் ஆகிய பணியிடங்கள் காலியாக உள்ளதால் குடிநீர் பராமரிப்பு பணிகளில் சிரமம் ஏற்படுகிறது. இதனால் தற்காலிகமாக இரண்டு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் மூன்று மாதங்களுக்கு பணியமர்த்தி பணியை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.80,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.890/2020/இ1)

12. பவானி நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் ( TURIP 2020-21) -ன் கீழ் தார்சாலை புதுப்பித்தல் மற்றும் மழைநீர்வடிகால் கட்டுதல் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் சாலைகள், தார்சாலை அமைக்கும் பொழுதும் மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பொழுதும், இந்த சாலைகளில் உள்ள பழைய வீட்டு குடிநீர் இணைப்பு குழாய்கள் சேதமடையும் நிலை உள்ளது. அப்படி சேதமடையும் பொழுது அதனை உடனடியாக சரி செய்து பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.857/2020/இ1)

**இடம்: பவானி**

**நாள்: 31.07.2020**

**(ஒம்)திருமதி.S.M.பாரிஜான்**
**ஆணையாளர்/தனி அலுவலர்**
**பவானி நகராட்சி**